ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1761/6 - 2012 ජූනි 06 වැනි බදාදා - 2012.06.06
*1761/6 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 3/2/8/1/12.
காணி அமைச்சின் இல. : எல்டீ/05/2011/சீஈபீ/327.

மேல் கொத்மலை நீர் மின் திட்டத்தின் கீழ் கி. வோ. 220 அதிசக்தி வாய்ந்த மின் தொடரை அமைப்பதற்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

நுவரெலியா மாவட்டத்தில், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில், மெதப்பனை வலயத்தில், களப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட மூ. வ. ப. 2798 இலக்கமுடையதும் 2012.04.23 ஆந் திகதியுடையதுமான மூலவரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 0.2648 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ்க் குறிப்பிடும் காணி :

1. **துண்டு இல. 01**
காணியின் பெயர் : வெவலியத்தேஹேன ; விபரம் : திறந்த தரிசு நிலம் ; ஆரம்ப உரிமை கோருபவர் : திரு. ஏ. எஸ். ஜே. வீரசேகர, இல. 36ஏ 126, ருக்மல்கம, கொட்டாவ ; விஸ்தீரணம் : 0.2648 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி மு. ப. 9.30 முதல் 12.30 மணி வரை இல. 01 இற்கான உரிமைத்தேர்வுகளுக்காக கொத்மலை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். எம். யூ. பீ. ஹேரத் ,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கொத்மலை,
2012.05.30.

06-679

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.